மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை,
இ.ம.எண்.4/2026
இன்
அ.வ.எண்.80/2018
––––

1) செல்லம்மாள்
2) சின்னகுருசாமி
3) காந்தி
4) கணேசன்
5) கற்பகவல்லி
6) லட்சுமி
7) முருகேஸ்வரி
8) பேச்சிமுத்து
9) இராமு
10) சக்திவேல்
11) சாமுவேல்ராஜசேகர்
12) சுப்பிரமணி
13) சுரேஷ்
14) சொர்ணமுத்து
15) தங்கம்
16) வேல்சாமி ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1) சமுத்திரம்
2) தமிழ்நாடு பூமிதான வாரியம்
அதன் இயக்குநர் செயலாளர் மூலமாக.
3) வட்டாட்சியர் அவர்கள்,
கோவில்பட்டி.
4) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
தூத்துக்குடி மாவட்டம். ...எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 17.03.2026 அன்று என்முன்பு இறுதிவிசாரணைக்கு வரப்பெற்று மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.இராமசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கதிர்வேல்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.07 15:07:04 +0530

அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.M.இராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகி, எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்தும், மனுதாரர்கள் மற்றும் 1ம்எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

**1)** சமூகம் கோர்ட்டிலிருந்து ஒரு கமிஷனர் நியமித்து சர்வேயர் உதவியுடன் தபசில் சொத்தை அளந்து அதன் அளவுகள், நான்கு மால்கள், இயற்கை அம்சங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் குறித்து பிளானுடன் ஒரு விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவாக வேண்டி இம்மனு ஆர்டர் 26 ரூல் 9 சி.பி.சி–யின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்–**

இம்மனுதாரர் அசல் வழக்கில் 9ம்வாதி ஆவார். பிராது தபசில் சொத்தானது வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என தீர்மானிப்பதன் மூலம், அதன் தொடர்ச்சியாய் 1ம்பிரதிவாதியை தபசில் சொத்திலிருந்து காலி செய்து காலிசுவாதீனத்தை வாதிகள் வசம் ஒப்படைக்கும்படிக்கு பரிகாரம் கேட்டு பிராது தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி அதனை மறுத்து கட்சி செய்து வருகிறார். மனுதாரர்கள் தரப்பில் ஆக்கிரமிப்பு விபரம் பற்றி தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துரைக்கும் பொருட்டு சமூகம் கோர்ட்டிலிருந்து ஒரு கமிஷனர் நியமனம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், ஷை விவரங்களை வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணங்களின் மூலம் மட்டுமே நிரூபிக்க இயலாது என்றும், கமிஷனர் நியமிப்பதால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பு கட்சியை தெளிவாக எடுத்துக்கூற இயலும் என்றும், கமிஷனர் நியமிக்க வேண்டியது அவசியமானது என்றும், இல்லாதுபோனால் அளவு கடந்த கஷ்டம் நஷ்டம் ஏற்படும் என்றும், ஆகவே கமிஷனர் நியமித்து சர்வேயர் உதவியுடன் தபசில் சொத்தை அளந்து

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.07 15:07:10 +0530

ஆக்கிரமிப்புகள் குறித்து பிளானுடன் ஒரு விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**3) 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்–**

மனுதாரர்கள் தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீனப்பரிகாரம் கேட்டு பிராது தாக்கல் செய்துள்ளார் என்று கூறியுள்ளது மட்டுமே உண்மை. இதர சங்கதிகள் உண்மையல்ல என்றும், மனுதாரர்கள்/வாதிகளின் கட்சியை நிரூபிக்க நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரியுள்ளார். Commissioner cannot be appointed to collect the evidence என்பது முன் தீர்ப்புகளால் வலியுறுத்தப்பட்ட சட்ட நிலையாகும். அதனால் மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோரி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா, அல்லது தனது முன்பாத்தியஸ்தருக்கு பாத்தியப்பட்டதா என்ற Title குறித்த dispute ஆகும். தாவா சொத்தின் அடையாளம் மற்றும் அளவு குறித்து ஏற்பட்ட dispute அல்ல என்றும், No dispute regarding indemnity and measuring உரிமை மூலத்தை ஆவணங்கள் மூலம் தான் முடிவு செய்ய இயலும். அதனால் நீதிமன்ற ஆணையர் நியமிக்க அவசியம் இல்லை என்றும், பொதுவாக இருபக்க நில உரிமையாளர்களுக்கு இடையே அளவு குறித்து தாவா ஏற்பட்டால் தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியமாகும். முழு தாவா சொத்தையும் பொறுத்து Title dispute உள்ள நிலையில் ஆவணங்களின் அடிப்படையில் தான் நிரூபிக்க முடியும் என்றும், நீதிமன்ற ஆணையர் மூலம் நிரூபிக்க முடியாது என்றும், தபசில் கண்ட விபரப்படி தபசில் சொத்தை அளக்க இயலாது என்றும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை–**

இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.07 15:07:15 +0530

**5) நீதிமன்ற பரிசீலனை–**

**5(1)** மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கில் பிராது தபசில் சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை செய்து சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் 1ம்பிரதிவாதி எதிர்வழக்குரையில் தாவா சொத்து சர்வே எண்.53/2ல் 64 செண்ட் புஞ்சை நிலம் ஆதியில் ராமகிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து, அவர் 08.11.1987ல் சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் ஜெயராஜ் என்பவருக்கு கிரையம் கொடுத்து அனுபவம் செய்து வந்து, 29.01.1988ல் கணேசன் என்பவருக்கு 57 செண்ட் நிலத்தை பதிவு கிரைய ஆவணம் கொடுத்து அனுபவித்து வந்து, 21.11.1988ல் கிரையம் பெற்ற 57 செண்டில் தென்புறம் 30 செண்ட் நிலத்தை கோமதி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து, கோமதி என்பவர் அனுபவித்து வந்து, 08.02.2008 ல் 1ம்பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்து சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டார். கிரைய ஆவணம் பதியாமல் 1ம்பிரதிவாதி கிரைய இடத்தில் வேலி அமைத்து கட்டிடம் கட்டி கோழி பண்ணை நடத்தி வருகிறார். மின்இணைப்பு பெற்றுள்ளார், வாதிகளுக்கும், தபசில் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று தாக்கல் செய்துள்ளார். வாதி தாவா சொத்தை பூமிதான போர்டு தானமாக பெற்று நிலமில்லா ஏழைகள், கூட்டுறவு சங்கங்கள், சர்வோதய சங்கங்கள், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கினார். 08.0 2.2011ல் வாதிகளுக்கு வீட்டு மனை விநியோகம் செய்யப்பட்டது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே தாவா சொத்து சம்பந்தமாக உரிமை பிரச்சனை எழுந்து, அசல் வழக்க்கில் வா.சா.1 குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து சர்வேயர் உதவியுடன் அளந்து அத்துமால் கண்டு அறிக்கை தாக்கல் செய்ய மனு அபிடவிட்டில் ஆக்கிரமிப்பு விவரம் பற்றி தெளிவாகவும்,

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.07 15:07:21 +0530

விரிவாகவும் எடுத்துரைக்கும் பொருட்டு மனுதாரர்கள் கட்சியினை நிரூபிக்கும் பொருட்டு கோர்ட்டிலிருந்து கமிஷனர் நியமனம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. ஷை விவரங்களை வாய்மொழி மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க இயலாது என்று இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**5(2)** 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்தின் உரிமை மனுதாரர்களுக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும் இடையே இருந்து வருவதால் சாட்சியங்களை சேகரிப்பதற்காக வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்களுக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும் இடையே தாவா சொத்தின் அளவுகள் மற்றும் அடையாளம் குறித்து பிரச்சனை ஏற்படவில்லை. உரிமை மூல ஆவணங்கள் பிரச்சனை ஏற்பட்டிருப்பதால் அதனை முடிவு செய்யாமல் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய கோருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. தாவா சொத்தின் உரிமை பிரச்சனையை ஆவணங்கள் மூலம் மட்டுமே நிரூபிக்கத்தக்கது என்று மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**5(3)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்களுக்கும், 1ம்எதிர்மனுதாரருக்கும் தாவா சொத்தின் உரிமை ஆவணம் பிரச்சனை ஏற்பட்டு மனுதாரர்கள்/வாதிகளுக்கு தாவா சொத்தை 08.02.2011ல் ஒப்படைக்கப்பட்டதாகவும், 1ம்எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு 08.11.1987 முதல் பதிவு ஆவணங்கள் மூலமாக உரிமை கோரி வரப்பட்டிருப்பதால் தாவா சொத்தின் உரிமை பிரச்சனை மனுதாரர்கள் மற்றும் 1ம்எதிர்மனுதாரருக்கு இடையே ஏற்பட்டிருப்பதாலும், இந்த வழக்கு 8 ஆண்டுகள் வழக்கு விசாரணை பட்டியலில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், தாவா சொத்தின் அளவுகள் மற்றும் அமைப்பு பற்றி மனுதாரர்கள் மற்றும் 1ம்எதிர்மனுதாரருக்கு இடையே பிரச்சனை ஏற்படாத நிலையில் வழக்கறிஞர் ஆணையர் நியமித்து

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.07 15:07:27 +0530

சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை அளவு செய்து ஆக்கிரமிப்புகளை நிரூபிக்க வேண்டிய அவசியம் சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்படவில்லை என்பதாலும், தாவா சொத்திற்கு ஆணையர் நியமித்து சாட்சியங்களை சேகரிப்பது சட்டம் அனுமதிக்கத்தக்கதல்ல என்பதை கருத்தில்கொண்டு மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**6) இறுதியாக,** மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 07.04.2026 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.07 15:07:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்–</u>** இல்லை.

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் –</u>** இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்–</u>** இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் –</u>** இல்லை.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.07 15:07:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மா.உ.நீ., கோவில்பட்டி.
இ.ம.எண்.4/2026
இன்
அ.வ.எண்.80/2018
வரைவு/நேரிய/ உத்தரவு
நாள்–07.04.2026